முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1041

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.08.2022**, வெள்ளிக்கிழமை

1. தொண்டர் படை கொண்ட அரங்கனே
தொண்டுள்ளம் கொண்ட தேசிகனே
கொண்டதொரு ஆறுமுகன் வழிபாட்டை
குவலயம் எங்கும் ஞானமாக அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 20 நாள், 05.08.2022 வெள்ளிக்கிழமை)
வரமென அரங்கன் சக்திக்குள்ளே
வடிவேலன் யான் ஆற்றல்பட இயங்கிவர
3. வருகின்ற முழுமதி காலம் தன்னில்
வையகத்தில் அற்புதங்கள் சிலதுகாணும்
தருகின்ற அரங்கன் தர்மத்திலும்
தனித்துவம் இன்னும் பெருக நேரும்
4. நேர்மைபட அரங்கன் திருவடி பற்றி
நிலவுலகில் தொண்டு செய்கின்ற அனைத்து மாந்தர்கட்கும்
மாந்தர்கட்கும் இனி வருகின்ற ஒவ்வொரு முழுமதியிலும்
வல்லமைபட சில சூட்சும சக்தி
5. சக்திதனை ஆறுமுகன் யானும்
சாற்றிடுவேன் அருளி உயர்த்துவேன்
உயர்வுபட அரங்கன் தீட்சை
உலகத்தில் பெற்ற மக்களுக்கெல்லாம்
6. தயவாக ஆறுமுகன் சர்வபலம் தந்து காத்தருள்வேன்
தரணியில் அரங்கனே சிறந்த ஞானியாகும்
ஞானியரின் நாமஜெபம் போற்றும் மக்களெல்லாம்
ஞானிகளாகி உலகில் தேறநேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–